சுருக்கம்

பொதுப் பணிகள் – தமிழ்நாடு அமைச்சுப் பணி – கருணை அடிப்படை பணி நியமனம் – பொது சுகாதாரம் மற்றும் நோய்த் தடுப்பு மருந்துத் துறை – திரு.க.ராஜேஷ் குமார், இளநிலை உதவியாளர், த/பெ. (அமரர்) திரு.P.கணேசன், ஆரம்ப சுகாதார நிலையம், பெரும்பாக்கம், செங்கல்பட்டு சுகாதாரப் பகுதி மாவட்டம் – பணி வரன்முறை செய்தல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் (ஏபி1) துறை

அரசாணை (2ப) எண்.70 நாள் 23.03.2021

திருவள்ளுவர் ஆண்டு 2052
சார்வரி, பங்குனி – 10

படிக்கப்பட்டவை:

1. அரசாணை (நிலை) எண்.100, பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை, நாள் 01.08.2018.
2. அரசாணை (நிலை) எண்.18, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, நாள் 23.01.2020.
3. பொது சுகாதாரம் மற்றும் நோய்த் தடுப்பு மருந்துத் துறை இயக்குநரின் கடித எண்.66816/ப.தொ.4/இரு.3/2015, நாள் 20.02.2020.

******

ஆணை:

பொது சுகாதாரம் மற்றும் நோய்த் தடுப்பு மருந்துத் துறையில் சேலம் சுகாதாரப் பகுதி மாவட்டம் வெள்ளாபுரம் ஆரம்ப சுகாதார நிலையத்தில் சுகாதார ஆய்வாளர் நிலை–1ஆகப் பணியாற்றி வரும்போது 15.05.2004 அன்று பணியிடை மரணமடைந்த திரு.P.கணேசன் என்பவரின் மகன் திரு.க.ராஜேஷ் குமார் என்பவர் கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளராக பணி நியமனம் வேண்டி 02.06.2006 அன்று விண்ணப்பம் சமர்ப்பித்துள்ளார். தனியர் பத்தாம் வகுப்பு தேர்ச்சி பெற்றுள்ளதுடன், அரசு ஊழியர் இறக்கும் சமயத்தில் 14 வயதை பூர்த்தி செய்துள்ளார் மற்றும் கருணை அடிப்படையில் பணி நியமனம் கேட்டு விண்ணப்பம் சமர்ப்பிக்கும்போது 16 வயதை பூர்த்தி செய்துள்ளார். தனியர் அரசாணை (நிலை) எண்.560, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, நாள் 03.08.1977–இல் தெரிவித்துள்ள நிபந்தனைகளில், வயதுத் தகுதி தவிர தேவையான பிற தகுதிகளை நிறைவு செய்ததாலும், 10.12.2014 நாளிட்ட தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறையின் அரசாணை (நிலை) எண்.155இல், "23.08.2005 முதல் 03.05.2010 வரை கருணை அடிப்படையில் பணி நியமனம் வேண்டி விண்ணப்பம் அளித்தவர்கள் கருணை அடிப்படையிலான பணி நியமனத்திற்கான குறும வயதுத் தகுதி தவிர, அனைத்து பிற தகுதிகளை பணிகோரிய விண்ணப்ப நாளிலும், குறும வயதுத் தகுதி மட்டும் (18 ஆண்டுகள் நிறைவு) பணி நியமன நாளிலும் நிறைவு செய்திருந்தால்

...2...

Attested
Dr. S. KALEESWARAN MBBS., DPH
Medical Officer Quality
Directorate of Public Health &
Preventive Medicine
Chennai

போதுமானதாக கருதப்பட வேண்டும்'' என ஆணையிடப்பட்டுள்ளதன் அடிப்படையிலும், கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளராக செங்கல்பட்டு சுகாதாரப் பகுதி மாவட்டம், பெரும்பாக்கம் ஆரம்ப சுகாதார நிலையத்தில் 29.08.2018 அன்று முற்பகல் தற்காலிகமாக பணி நியமனம் செய்யப்பட்டார். தனியர் கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளராகப் பணி நியமனம் பெறும்போது 28 வயதை பூர்த்தியடைந்துள்ளார். தனியர் திரு.க.ராஜேஷ் குமார் இளநிலை உதவியாளர் பதவிக்கு தேவையான கல்வி மற்றும் வயது தகுதிகளைப் பெற்றுள்ளதால், அவரது தற்காலிகப் பணியினை அவர் இளநிலை உதவியாளர் பதவியில் பணியில் இணைந்த நாளான 29.08.2018 அன்று முற்பகல் முதல் வரன்முறைப்படுத்துமாறு மேலே மூன்றாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில் பொது சுகாதாரம் மற்றும் நோய்த் தடுப்பு மருந்துத் துறை இயக்குநர் கேட்டுக்கொண்டுள்ளார்.

2. பொது சுகாதாரம் மற்றும் நோய்த் தடுப்பு மருந்துத் துறை இயக்குநரின் கருத்துருவினை, தொடர்புடைய அரசாணைகள் மற்றும் சான்றிதழ்கள் / ஆவணங்கள் ஆகியவற்றுடன் அரசு ஆய்வு செய்தபோது, தனியர் திரு.க.ராஜேஷ் குமார் கருணை அடிப்படை பணி நியமனம் தொடர்பாக தெரிவிக்கப்பட்டுள்ள நிபந்தனைகளைகளில் வயதுத் தகுதி தவிர, தேவையான பிற தகுதிகளை நிறைவு செய்துள்ளார் என்பதும், 10.12.2014 நாளிட்ட தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறையின் அரசாணை (நிலை) எண்.155இன் அடிப்படையில், 25.08.2018 நாளிட்ட பொது சுகாதாரம் மற்றும் நோய்த் தடுப்பு மருந்துத் துறை இயக்குநரின் செயல்முறை ஆணை எண்.66816/பதொ.4/இரு3/2015-இன்படி தனியருக்கு கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளராகப் பணி நியமனம் வழங்கப்பட்டு, தனியர் 29.08.2018 அன்று முற்பகல் பணியில் இணைந்துள்ளார் என்பதும் தெரிய வருகிறது. மேலும், இந்நேர்வில் தனியர் பணி நியமனம் வேண்டி 02.06.2006 அன்று சமர்ப்பித்த விண்ணப்பமானது அரசுப் பணியாளர் மரணமடைந்த மூன்றாண்டுகளுக்குள் அளிக்கப்பட்டிருந்தாலும், அச்சமயத்தில் தனியர் 18 வயதினை நிறைவு செய்யவில்லை. எனவே, மேற்படி விண்ணபத்தின் அடிப்படையில் தனியருக்கு வழங்கப்பட்ட பணி நியமனமானது மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட அரசாணை மற்றும் தமிழ்நாடு அரசுப் பணியாளர் (பணி நிபந்தனைகள்) சட்டம், 2016இன் சட்டப் பிரிவு 20(6)(b)க்கு முரணானது என்பதால் மேற்படி சட்டப் பிரிவினை தனியர் பொருட்டு தளர்வு செய்தே தனியரின் கருணை அடிப்படையிலான தற்காலிகப் பணி நியமனத்தினை வரன்முறை செய்ய இயலும். மேலும் இவ்வாறு பணிவரன்முறை செய்து, பணப்பலன்களை பணி நியமன நாளிலிருந்து முன்தேதியிட்டு வழங்கக் கருதும் பட்சத்தில் மேற்காணும் சட்டத்தின் பிரிவு 28(2)-யும் தனியர் பொருட்டு தளர்வு செய்ய வேண்டும்.

3. எனவே, கருணை அடிப்படையில் தற்காலிக இளநிலை உதவியாளராகப் பணியமர்த்தப்பட்டு, செங்கல்பட்டு சுகாதாரப் பகுதி மாவட்டம், பெரும்பாக்கம் ஆரம்ப சுகாதார நிலையத்தில் பணிபுரிந்து வரும் திரு.க.ராஜேஷ் குமார் என்பவரின் தற்காலிகப் பணி நியமனத்தினை, மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட அரசாணைக்கு விலக்களித்து, தமிழ்நாடு அரசுப் பணியாளர் (பணி நிபந்தனைகள்) சட்டம், 2016, (தமிழ்நாடு சட்டம் 14/2016)இல், பிரிவு 58இன்கீழ் மாண்புமிகு தமிழக ஆளுநர் அவர்களுக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின்படி, மேற்படி சட்டத்தின் பிரிவு 20(6)(b) மற்றும் 28(2) ஆகியவற்றினை தனியர் பொருட்டு தளர்வு செய்து, தனியர் இளநிலை உதவியாளர் பதவியில் பணியில் இணைந்த நாளான 29.08.2018 அன்று முற்பகல் முதல் இளநிலை உதவியாளர் பதவியில், அப்பதவிக்கான உடற்தகுதி பெற்றிருக்க வேண்டும் என்ற நிபந்தனைக்குட்பட்டு வரன்முறை செய்து, பணப்பலன்களை பணி நியமன நாளிலிருந்து முன்தேதியிட்டு பெற்று வழங்கலாம் என அரசு முடிவு செய்து அவ்வாறே ஆணையிடுகிறது.

...3...

Attested

Dr. S. KALEESWARAN MBBS., DPH
Medical Officer Quality
Directorate of Public Health &
Preventive Medicine
Chennai

4. தமிழ்நாடு அரசுப் பணியாளர் (பணி நிபந்தனைகள்) சட்டம், 2016இல் (தமிழ்நாடு சட்டம் 14/2016) சட்டப் பிரிவு 58இன்கீழ் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின்படி, மாண்புமிகு தமிழக ஆளுநர் அவர்கள், கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளராக தற்காலிகமாக பணி நியமனம் செய்யப்பட்ட திரு.க.ராஜேஷ் குமார் என்பவரின் தற்காலிகப் பணி நியமனத்தினை அவர் பணியில் இணைந்த நாளான 29.08.2018 அன்று முற்பகல் முதல் வரன்முறை செய்து பணப் பலன்களை பணி நியமன நாளிலிருந்து முன்தேதியிட்டு பெற்று வழங்க ஏதுவாக மேற்படி சட்டத்தின் சட்டப் பிரிவுகள் 20(6)(b) மற்றும் 28(2) ஆகியவற்றினை திரு.க.ராஜேஷ் குமார் பொருட்டு தளர்த்தி ஆணையிடுகிறார்.

5. தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத் துறையின் அ.சா.எண்.21013/க்யூ1/2020–1, நாள் 21.12.2020 மற்றும் பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறையின் அ.சா.எண்.35056/ஜி2/2020–1, நாள் 26.12.2020 ஆகியவற்றின் ஒப்புதலோடு இவ்வாணை வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

ஜெ.ராதாகிருஷ்ணன்,
அரசு முதன்மைச் செயலாளர்.

பெறுநர்
பொது சுகாதாரம் மற்றும் நோய்த் தடுப்பு மருந்துத் துறை இயக்குநர், சென்னை– 600 006.
தனியர் (பொது சுகாதாரம் மற்றும் நோய்த் தடுப்பு மருந்துத் துறை இயக்குநர்,
சென்னை–600 006 வழியாக.)
மாநிலக் கணக்காயர், சென்னை– 600 018.
மாவட்ட கருவூல அலுவலர், செங்கல்பட்டு.
நகல்
தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, சென்னை–600 009.
பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை, சென்னை–600 009.
மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்பநலத் துறை அமைச்சரின்
சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை–600 009.
மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சரின் சிறப்பு நேர்முக
உதவியாளர், சென்னை–600 009.
மாண்புமிகு மீன்வளம் மற்றும் பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்த்திருத்தத் துறை
அமைச்சரின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை–600 009.
மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் (தகவு பிரிவு) துறை, சென்னை–600 009.
இருப்புக் கோப்பு / உதிரி நகல்.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

பிரிவு அலுவலர்

Dr. S. KALEESWARAN MBBS., DPH
Medical Officer Quality
Directorate of Public Health &
Preventive Medicine
Chennai